முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் புண்ணாக்கீசர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

10.10.2018, புதன்கிழமை

1. **இடரை வெல்ல சுடரை ஏற்றி**
   **ஏழாம் படை வீடு அமைத்த அண்ணலே**
   **சுடராம் சரவண சோதி வழிபாடு**
   **சுத்தநெறிபட மக்களை கூட்டி**
2. கூட்டியே ஞானிகள் பூசையை
   குவலயமெங்கும் பரப்பி வருகின்ற
   மாட்சிமைமிக்க ஞானதேசிகனே
   மண்ணுலகில் உன் பெருமை கூறி
3. கூறியே ஒளி சூட்சும நூலை
   குவலயத்தில் **விளம்பி தரிவை திங்கள்**
   **தெரியவே அறுநான்கு திகதி புந்தி வாரம்**
   **(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 24ம் நாள் 10.10.2018, புதன்கிழமை)**
   **தேசிகனுக்கு புண்ணாக்கீசர் யானும்**
4. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
   உயர்வை பெற வளர்ச்சி பெற
   ஞானவழிக்கு உலகோர் எல்லாம்
   நம்பிக்கை கொண்டு வருக வேண்டும்
5. வேண்டியே சமதர்ம நெறியாம்
   வினை வெல்லும் அரங்கன் தருமம்
   தொண்டுபட உலக மக்களெல்லாம்
   தேசிகனார் வழி ஏற்று வருக
6. வருகவே மக்களிடை பசிபிணி
   வறுமை அண்டாத பெருவாழ்வாய்
   முருகப்பெருமான் ஆளுமை கொண்ட
   முழுமை ஞானஆட்சி காலமாக
7. காலமாக அரங்கன் உருவாக்கிய
   கண்ணியமிக்க சத்தியஜோதி அமைப்பு
   மூலமாக இந்த பெருமாற்றமும்
   மொழிகுவேன் அரங்கன் வழி நடந்தேறும்
8. தேறுதலை தேர்வு முறைகளை
   திறமைகளை காக்க வளர்க்க
   மாறுதலை செய்ய வருகின்ற
   மகா சக்தியாக அரங்கன் அமைப்பு
9. அமைப்பு வளர்ந்து வருக
   அரங்கன் சீடர்களாகி இணைந்து
   அமைப்பில் அங்கத்தினர்களாகி
   அகிலத்தார் ஒன்றிணைந்து வருக

10. வருகவே களங்கமான அரசியல்
வரைமுறையிலா ஊழல்கள் யாவும்
வருமுலகில் அகன்று ஓடியே
வல்லமைமிக்க நேர்மையான தலைமை

11. தலைமையும் தமிழகம் போற்றும்
தன்னிகரில்லா ஞான ஆட்சி
காலமதும் சடுதி கனியுமென்பேன்
கண்டுரைத்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் புண்ணாக்கீசர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மக்களின் துன்பங்களை எல்லாம் வென்றிட சரவணஜோதி சுடரினை ஏற்றி வைத்து உலக நலனிற்காக ஏழாம் படை வீடாம் துறையூர் ஓங்காரக்குடில் அமைத்திட்ட அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அருட்பெருஞ்ஜோதி சுடராம் சரவணஜோதி வழிபாட்டினை சுத்தநெறிபட மக்களையெல்லாம் கூட்டி முற்றுப்பெற்ற ஞானிகளின் பூஜைகளை உலகமெங்கும் பரப்பி வருகின்ற பெருமைமிக்க ஞான தேசிகனே இவ்வுலகில் உமது பெருமைகளை கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 24ம் நாள் 10.10.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே புண்ணாக்கீசர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் புண்ணாக்கீசர்.

உலக மக்களே நீங்கள் உயர்வடையவும், மேன்மேலும் வளர்ச்சி பெறவும், ஞானவழிக்கு அரங்கன் கூறும் தூய ஞானவழிக்கு நம்பிக்கையோடு வந்திட வேண்டுமப்பா.

சமதர்ம நெறியாம் வினை வெல்லும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தருமம்தனை தொண்டுள்ளத்தோடு உலக மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனை பின்பற்றி ஏற்று வர வேண்டும்.

உலக மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வழியை பின்பற்றி வந்திட மக்களிடையே பசிப்பிணி நீங்கும், வறுமைகள் அண்டாத வகையில் பெருவாழ்வை வாழ்வார்கள்.

முருகப்பெருமானின் ஆளுமையைக் கொண்ட முழுமை ஞானஆட்சி காலமாக அரங்கன் உருவாக்கிய கண்ணியம்மிக்க சத்தியஜோதி அமைப்பின் மூலமாக மக்களிடையே பெரும் மாற்றங்கள் உண்டாகிடும், அரங்கன் மூலமாய் இவை நடந்திடும்.

உலகினில் மக்கள் ஞானத்தினை தேடும் தேடுதலை தேர்வு முறைகளை, திறமைகளை காக்கவும், வளர்த்திடவும் மாறுதல்களை செய்ய வேண்டி உலகின் மகா சக்தியாக ஆறுமுக அரங்கனின் அமைப்பு மகா சக்தியாக வளர்ந்து வருகின்றது.

மக்களெல்லாம் அரங்கனை பின்தொடர்ந்து அரங்கனின் மகா சக்தியான அமைப்பில் இணைந்து அரங்கனுக்கு சீடர்களாக ஆகி சத்தியஜோதி அமைப்பினில் அங்கத்தினர்களாக ஆகி உலக மக்களெல்லாம் ஒன்றிணைத்து வருகின்றார்.

ஆதலினால் களங்கமான அரசியல் வரைமுறை இல்லாத ஊழல்கள் யாவும் வருங்காலங்களில் அகன்று ஓடி வல்லமைமிக்க நேர்மையான தலைமையும் தமிழகம் போற்றும்.

தன்னிகரில்லா தலைமையையும் தமிழகம் விரைந்து தன்னிகரில்லா ஞானஆட்சியும் விரைந்து கனிந்துவிடும் என தமது ஆசி நூல் மூலம் உலக நலம் கருதி கூறுகிறார் மகான் புண்ணாக்கீசர்.

–சுபம்–